வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 12.9.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

நாட்டின் 15-ஆவது குடியரசு துணைத் தலைவராக திரு சி பி ராதாகிருஷ்ணன் இன்று பதவி ஏற்றுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், ஞான பாரதம் சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டு, பழங்கால ஓலைச் சுவடிகளின் டிஜிட்டல் மயம் தொடர்பான இணைய தளத்தை தொடக்கி வைத்தார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை முதல், வரும் 15-ஆம் தேதி வரை, மிசோரம், மணிப்பூர், அசாம், மேற்குவங்கம், பீகார் ஆகிய மாநிலங்களுக்கு பயணம் மேற்கொள்கிறார்.

மக்களின் ஆரோக்கியமே, நாட்டின் நிலையான முன்னேற்றத்திற்கு ஆதாரம் என்று, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கூறி உள்ளார்.

*ராதாகிருஷ்ணன்*

நாட்டின் 15-ஆவது குடியரசு துணைத் தலைவராக திரு சி பி ராதாகிருஷ்ணன் இன்று பதவி ஏற்றுக் கொண்டார். புதுடெல்லி குடியரசு தலைவர் மாளிகையில் நடைபெற்ற பதவி ஏற்பு விழாவில், குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, திரு சி பி ராதாகிருஷ்ணனுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். பிரதமர் திரு நரேந்திர மோடி, முன்னாள் குடியரசு தலைவர் திரு ராம்நாத் கோவிந்த், முன்னாள் குடியரசு துணைத்

தலைவர் திரு ஜெகதீப் தன்கர், மற்றும், திரு அமித் ஷா, திரு ராஜ்நாத் சிங், திரு ஜே பி நட்டா, திரு பியூஷ்கோயல், திரு நிதின்கட்கரி உள்ளிட்ட மத்திய அமைச்சர்கள், பதவி ஏற்பு விழாவில் கலந்து கொண்டனர். தொடர்ந்து குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் டெல்லி ராஜ்காட்டில் உள்ள மகாத்மா காந்தி சமாதியிலும், முன்னாள் பிரதமர் வாஜ்பாய் நினைவிடத்திலும், மலரஞ்சலி செலுத்தினார்.

குடியரசு துணைத் தலைவர் பதவிக்கு கடந்த 9-ஆம் தேதி நடைபெற்ற தேர்தலில், ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக போட்டியிட்ட திரு சி பி ராதாகிருஷ்ணன், இண்டியா கூட்டணி வேட்பாளர் திரு சுதர்சன் ரெட்டிக்கு எதிராக வெற்றி பெற்றார். நாடாளுமன்ற இரு அவைகளின் உறுப்பினர்கள் வாக்களித்த இத்தேர்தலில், திரு சி பி ராதாகிருஷ்ணனுக்கு, 452 வாக்குகளும், திரு சுதர்சன் ரெட்டிக்கு, 152 வாக்குகளும் கிடைத்தன. தமிழகத்தில் திருப்பூரில் பிறந்தவரான திரு சி பி ராதாகிருஷ்ணன், ஏற்கனவே, ஜார்கண்ட், தெலங்கானா மற்றும் மகாராஷ்டிர மாநிலங்களின் ஆளுநராகவும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் துணை நிலை ஆளுநராகவும் பதவி வகித்துள்ளார்.

மோடி-வாழ்த்து

குடியரசு துணைத் தலைவராக இன்று பதவி ஏற்றுள்ள திரு சி பி ராதாகிருஷ்ணனின் பதவிக் காலம், மக்கள் சேவைக்கு அர்ப்பணிக்கப்பட்டு, வெற்றிகரமாக அமைய தாம் வாழ்த்துவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். சமூக சேவைக்கும், ஜனநாயக மாண்புகளின் வலுவாக்கத்திற்கும், வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் என்று, பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் கூறி உள்ளார்.

ஜிஎஸ்டி

நாட்டு மக்களுக்கான தீபாவளி பரிசாக இவ்வாண்டு சுதந்திர தினத்தன்று பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்ட அறிவிப்பின்படி, அண்மையில் ஜிஎஸ்டி வாரியம், பல்வேறு துறைகளுக்கு வரிக் குறைப்பு

அறிவித்துள்ளது. அனைத்து பிரிவு மக்களின் வாழ்க்கையை எளிதாக்கும் வகையிலான, இந்த, அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களின் கீழ், குறிப்பாக, சாதாரண மக்களின் அன்றாட பயன்பாட்டிற்கான பல பொருட்களுக்கு, முழு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து ஒரு செய்தி தொகுப்பு .......

(வாய்ஸ்)

ஜிஎஸ்டி

(வாய்ஸ்)

வணிக முத்திரை இல்லாத அரிசி, கோதுமை, மற்றும் பயறு வகைகளும், அதி வெப்பநிலையில் பதப்படுத்திய பால் உட்பட, பாக்கெட்டுகளில் அடைத்து விற்கப்படும் பல்வேறு அத்தியாவசியப் பொருட்களும், புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களின் கீழ், முழு வரிவிலக்கு வகைப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளன. அனைத்து வகை ரொட்டி ரகங்களுக்கும் முழு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதனால் சாதாரண மக்களின் குடும்ப செலவு குறைகிறது. இதுஅல்லாது புதிய வரி முறைகளின் கீழ், ஆயுள் காப்பீடு மற்றும் மருத்துவக் காப்பீட்டு பிரிமியம் தொகைக்கும் வரி விலக்கு அளிக்கப் பட்டுள்ளதால், மக்கள் எளிதாக காப்பீட்டு வசதி பெறுவதுடன், மக்களிடையே காப்பீட்டு பழக்கம் அதிகரித்து, மருத்துவச் செலவுகள் குறையும் என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

மோடி-ஞா□ பாரதம்

புதுடெல்லியில் நேற்று தொடங்கிய 3 நாள் ஞான பாரதம்-சர்வதேச மாநாட்டில், இன்று பிரதமர் திரு நரேந்திர மோடி கலந்து கொண்டு, பழங்கால ஓலைச் சுவடிகளை டிஜிட்டல் வடிவத்திற்கு மாற்றிப் பாதுகாத்து, மக்கள் எளிதில் அணுக ஏதுவாகப் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள, பிரத்யேக இணைய தளத்தை தொடக்கி வைத்தார். இந்தியாவின் பழங்கால ஓலைச் சுவடிகளை பேணிக் பாதுகாத்து, டிஜிட்டல் மயம் மூலமாக மக்களிடையே பரப்புவதற்கான, ஞான பாரதம்

தேசிய முன் முயற்சியின் கீழ், இம்மாநாட்டின் ஒரு பகுதியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, கண்காட்சி ஒன்றையும் பிரதமர் பார்வையிட்டு, அரிய ஓலைச் சுவடிகள், கையெழுத்து பிரதிகள், மற்றும், ஓலைச் சுவடிகளின் டிஜிட்டல் மயம் தொடர்பான தொழில் நுட்ப வசதிகள் குறித்து கேட்டறிந்தார். இந்தியாவின் அறிவுப் பாரம்பரியத்தை, ஓலைச் சுவடி மரபுகள் மூலம் மீட்டெடுப்பது குறித்த இம்மாநாட்டில், பல்வேறு மாநிலங்கள் மற்றும் உலகெங்கிலும் இருந்து, ஆயிரத்திற்கும் மேற்பட்ட அறிஞர்கள், வல்லுனர்கள், மற்றும், கலாச்சார அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.

*மொரீசியஸ் பிரதமர்*

8 நாள் பயணமாக இந்தியா வந்துள்ள மொரீசியஸ் பிரதமர் டாக்டர் நவீன்சந்திர ராம்கூலம் இன்று அயோத்தி ராமர் கோவிலில் வழிபாடு செய்தார். முன்னதாக, அயோத்தியில் உள்ள மகரிஷி வால்மிகி விமான நிலையத்தில் வந்திறங்கிய மொரீசியஸ் பிரதமரை, உத்தரபிரதேஷ் முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் வரவேற்றார். அயோத்தி ராமர் கோவிலில் வழிபாடு முடிந்த பின்னர், திரு நவீன்சந்திர ராம்கூலம் டேராடூனுக்கு புறப்பட்டுச் சென்றார்.

*மோடி-மணிப்பூர்*

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை முதல், வரும் 15-ஆம் தேதி வரை, மிசோரம், மணிப்பூர், அசாம், மேற்குவங்கம், பீகார் ஆகிய மாநிலங்களுக்கு பயணம் மேற்கொள்கிறார். நாளை மிசோரம் பயணத்தின் போது, அய்ஸ்வால் நகருக்கான புதிய ரயில் பாதை உட்பட பல்வேறு வளர்ச்சி திட்டங்களை அவர் தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். இத்திட்டங்களின் மொத்த மதிப்பு சுமார் 9 ஆயிரம் கோடி ரூபாயாகும்.

தொடர்ந்து பிரதமர் நாளை மணிப்பூர் சென்று, மொத்தம் 8 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களைத் தொடக்கி வைத்து வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தமது அசாம் பயணத்தின் போது, குவஹாத்தியில், டாக்டர் பூபேன் ஹசாரிகா நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்கிறார். மொத்தம் 8 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில், அசாம் மாநிலத்திற்கான பல்வேறு உள்கட்டமைப்பு திட்டங்கள் மற்றும் தொழில் திட்டங்களையும் பிரதமர் தொடக்கி வைக்கிறார்.

பயணத்தின் கடைசி நாளில் பிரதமர் மேற்குவங்கம் சென்று கொல்கத்தாவில் 16-ஆவது ஒருங்கிணைந்த கமாண்டர்கள் மாநாட்டை தொடக்கி வைக்கிறார்.

அன்றைய தினமே பீகாரில், **பூர்ணியா** விமான நிலையத்தின் புதிய முனையத்தை, பிரதமர் திறந்து வைக்கிறார். **மக்கனா** என்னும் **தாமரை விதை** உற்பத்தி, விற்பனை மற்றும் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கான **தேசிய மக்கனா வாரியத்தையும்**, **பூர்ணியாவில்**, பிரதமர் திரு நரேந்திர மோடி திறந்து வைத்து, மொத்தம் 36 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வேறுபல திட்டங்களையும் தொடக்கி வைக்கிறார்.

மோடி-கட்டுரை

வடகிழக்கு மாநிலங்கள், நாட்டின் முன்னோடி பிராந்தியமாக மேம்பட்டு வருவது குறித்து மத்திய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் எழுதி உள்ள கட்டுரை ஒன்றை பிரதமர் திரு நரேந்திமோடி சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். வடகிழக்கு மாநிலங்கள், வளர்ச்சிக்காக காத்திருந்த நிலை மாறி தற்போது, தேசிய வளர்ச்சியின் மையமாகவே மாறி இருப்பதாக பிரதமர் கூறி உள்ளார். மிசோரம் தலைநகர் அய்ஸ்வாலை தேசிய ரயில்வே கட்டமைப்புடன் இணைக்கும் வகையில் புதிய ரயில் பாதை அமைக்கப்பட்டு இருப்பது, வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்த மைல்கல் என்று, அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தமது கட்டுரையில் கூறி உள்ளார்.

*ஊட்டச் சத்து*

மக்களின் ஆரோக்கியமே நாட்டின் முன்னேற்றத்திற்கு ஆதாரம் என்று புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கூறி

உள்ளார். புதுச்சேரி அரசின் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு துறை சார்பில் கம்பன் கலையரங்கில் இன்று நடைபெற்ற, தேசிய ஊட்டச்சத்து மாதம் தொடக்க விழாவில் உரையாற்றிய அவர் பொருளாதாரம்,கல்வி, தொழில்நுட்பம் போன்ற பல்வேறு துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டு வருகின்ற போதிலும் இந்த முன்னேற்றத்தை நிலையானதாக மாற்ற மக்களின் ஆரோக்கியம் அவசியம் என்றார். துணை நிலை ஆளுநர் மேலும் கூறுகையில் ..........

(வாய்ஸ்-கைலாஷ்நாதன்)

*ஊட்டச் சத்து*

தேசிய ஊட்டச் சத்து மாதத் தொடக்க விழாவில் முதலமைச்சர் திரு ரங்கசாமி பேசுகையில், புதுச்சேரியில் வரும் 18-ஆம் தேதி, மேலும் 10 ஆயிரம் முதியோர்களுக்கு, உதவித் தொகை வழங்கப்பட உள்ளதாக தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் .............

(வாய்ஸ்-ரங்கசாமி)

*ஊட்டச் சத்து*

தேசிய ஊட்டச் சத்து மாத தொடக்க விழாவில், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு ஜெயக்குமார், சட்டமன்ற உறுப்பினர் திரு அனிபால் கென்னடி, தலைமைச் செயலர் டாக்டர் சரத் சவ்கான், நலத்துறை செயலர் திரு ஜெயந்த்த குமார் ரே உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

*வானிலை*

வடக்கு ஆந்திரா மற்றும் தெற்கு ஒடிசா கடற்கரைக்கு அப்பால் வங்க கடலில் இன்று, காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகி உள்ளது. இது அடுத்த 2 நாட்களில், தெற்கு ஒடிசா மற்றும் அதை ஒட்டிய வடக்கு ஆந்திரா மற்றும் தெற்கு சட்டிஸ்கர் பகுதிகளின் குறுக்கே, மேற்கு வடமேற்கு திசையில் நகரக் கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம் விழுப்புரம்,கடலூர், மைலாடுதுறை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் புதுச்சேரி பகுதியிலும் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 18-ஆம் தேதி வரை

மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக கடலூர் மாவட்டம் ஸ்ரீமுஷ்ணத்தில் 11 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. திருக்கனூரில் 5 சென்டிமீட்டர்,மற்றும், பாகூரில் 3 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

*கிரிக்கெட்*

ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று துபாயில் நடைபெற உள்ள ஏ பிரிவு போட்டியில், ஓமன்-பாகிஸ்தான் அணிகள் மோத உள்ளன. இத்தொடரில், இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முக்கிய போட்டி, வரும் ஞாயிற்றுக் கிழமை நடைபெற உள்ளது.

*காரைக்கால் -வேளாண் அறிவியல்*

காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையத்தில், சென்னை உர உற்பத்தி ஆலையுடன் இணைந்து ஏற்பாடு செய்யப் பட்டிருந்த, இயற்கை வேளாண்மை பற்றிய கருத்தரங்கம் இன்று நடைபெற்றது. வேளாண் அறிவியல் நிலையத்தின் முதல்வர் முனைவர் ரவி நிகழ்ச்சியை தொடக்கி வைத்துப் பேசுகையில், விவசாயிகள், இயற்கை உரங்களை பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.ரசாயன உரங்களை பயன்படுத்த வேண்டிய நிலை இருந்தால், பரிந்துரைக்கப்பட்ட அளவில் மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும், உரங்களின் சமச்சீர் பயன்பாட்டின் மூலமாகவே மண்ணில் நுண்ணுயிர் பெருக்கத்தை பராமரிக்க முடியும் என்றும் அவர் கூறினார். மண்வள மேம்பாடு மற்றும் நெற்பயிரைத் தாக்கும் நோய்களின் கட்டுப்பாடு குறித்து தொழில்நுட்ப வல்லுனர்கள் உரையாற்றினர். கருத்தரங்களில் பங்கேற்றுப் பயன் பெற்ற விவசாயிகளுக்கு, சிறிய அளவில் மாதிரி இயற்கை உரங்கள் வழங்கப்பட்டன.

*முந்திரி வாரியம்*

தமிழகத்தில் முந்திர உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் கடலூரை தலைமையிடமாகக் கொண்டு முந்திரி வாரியம் அமைக்கப்பட்டுள்ளதாக மாநில வேளாண் அமைச்சர் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம்

தெரிவித்துள்ளார். 12 உறுப்பினர் அடங்கிய இவ்வாரியத்தின் செயல்பாடுகளால், முந்திரி தொழில் மேலும் வளர்ச்சி பெறும் என்றும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவரும் பயன்பெறுவார்கள் என்றும், சென்னையில் இன்று வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் அவர் தெரிவித்துள்ளார். 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டுடன் தமிழ்நாடு முந்திரி வாரியம் அமைக்கப்படும் என, நடப்பு நிதியாண்டிற்கான தமிழக அரசின் வேளாண் பட்ஜெட்டில் முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் அறிவித்து இருந்தார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

நாட்டின் 15-ஆவது குடியரசு துணைத் தலைவராக திரு சி பி ராதாகிருஷ்ணன் இன்று பதவி ஏற்றுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், ஞான பாரதம் சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டு, பழங்கால ஓலைச் சுவடிகளின் டிஜிட்டல் மயம் தொடர்பான இணைய தளத்தை தொடக்கி வைத்தார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை முதல், வரும் 15-ஆம் தேதி வரை, மிசோரம், மணிப்பூர், அசாம், மேற்குவங்கம், பீகார் ஆகிய மாநிலங்களுக்கு பயணம் மேற்கொள்கிறார்.

மக்களின் ஆரோக்கியமே, நாட்டின் நிலையான முன்னேற்றத்திற்கு ஆதாரம் என்று, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கூறி உள்ளார்.

--------

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 12.9.2025 நேரம் மாலை 6.10 மணி

-------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

நாட்டின் 15-ஆவது குடியரசு துணைத் தலைவராக திரு சி பி ராதாகிருஷ்ணன் இன்று பதவி ஏற்றுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், பழங்கால ஓலைச் சுவடிகளின் டிஜிட்டல் மயம் குறித்த ஞான பாரதம் சர்வதேச மாநாட்டில் உரையாற்றுகிறார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை முதல், வரும் 15-ஆம் தேதி வரை, மிசோரம், மணிப்பூர், அசாம், மேற்குவங்கம், பீகார் ஆகிய மாநிலங்களுக்கு பயணம் மேற்கொள்கிறார்.

மக்களின் ஆரோக்கியமே, நாட்டின் நிலையான முன்னேற்றத்திற்கு ஆதாரம் என்று, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கூறி உள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

-----------------------------------------